# මුදල් අමාත්‍යාංශය
# நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PE/COP/POLI/Circulars
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2016.03.08

அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல: 02/2016

அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்
பொது திறைசேரி
கொழும்பு – 01

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள்
மற்றும் அரசாங்க உடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

## அரசாங்க உடமை தொழில் முயற்சிகளின் மேலதிக ஊழியர்களுக்கான தன்னார்வ இளைப்பாறல் திட்டம்

1. **அறிமுகம்**

அரசாங்க உடமை தொழில்முயற்சிகளானது தேசிய பொருளாதாரத்தின் பொருளாதார மற்றும் ஏனைய நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தாபிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தேசிய பொருளாதாரத்திற்கு எதிர்பார்த்த நன்மையினைப் பெற்றுத் தராததுடன் நட்டமடைந்து அதன் மூலம் திறைசேரிக்கு சுமையாக சில நிறுவனங்கள் காணப்படுகின்றன. வேறு சில காரணிகளுடன் மேலதிக பதவியணி குறித்த நட்டத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசாங்க உடமை தொழில் முயற்சிகளினால் எதிர்பார்க்கப்பட்ட விளைவினை வழங்குவதற்கு அவற்றின் ஊழியப்படையினை அதிகூடிய உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

இப்பின்னணியில், அரசாங்க தொழில் முயற்சிகள் அவற்றை இணைக்கின்ற/ மூடுகின்ற/மீள்கட்டமைப்பு செய்கின்றபோது பின்பற்ற முடியுமான தன்னார்வ இளைப்பாறல் திட்டத்திற்கு 10/02/3/719/008 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கமைவாக 10.02.2016 ஆந் திகதிய தீர்மானத்திற்கிணங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

2. **தன்னார்வ இளைப்பாறல் திட்டத்திற்கு ஊழியர்களை இனம்காணல்**

அரச உடமை தொழில் முயற்சிகளின் பணிப்பாளர் சபையானது, தற்பொழுது காணப்படும் மேலதிக பதவியணியினை மதிப்பீடு செய்து இனம் காணல் வேண்டும். மேலதிக பதவியணியினை இனம் காண்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். நிறுவனத்தின் பிரதான பணிகளை செயற்படுத்துவதற்கு தேவையான ஆகக்குறைந்த ஊழியப் படையினை வைத்துக் கொள்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மேலே குறிப்பிட்டவாறு மேலதிக ஊழியர்கள் என இனம்காணப்பட்டவர்களுக்கு மாத்திரமே இது ஏற்புடையதாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தன்னார்வ இளைப்பாறல் திட்டம் செயற்படுத்தப்பட்ட பின்னர் திருத்தப்பட்ட பதவியணியானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பது கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் சபையானது அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக எதிர்கால ஆட்சேர்ப்புக்களை வரையறுத்துக் கொள்வதற்கு பொறுத்தமான ஏற்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகும். இதற்கு மாற்றமான ஏதேனும் செயற்பாடுகளுக்கு, நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் சிரேட்ட முகாமைத்துவமானது தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாகும்.

இளைப்பாறல் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் வெளிப்படையான முறையில் இடம்பெறல் வேண்டும்.

3. **நட்டஈடு கணிப்பிற்கான அடிப்படை**

பின்வரும் ஊழியர் வகுதிக்காக நட்டஈட்டு பொதி 2 கட்டங்களாக வழங்கப்படும்.

அ) 10 அல்லது 10 வருடங்களைவிட அதிக சேவை காலத்தைக் கொண்ட ஊழியர்கள்

i. கடந்தகால சேவை– ஒவ்வொரு 12 மாத சேவைகளும் 2.0 மாத சம்பளம்
ii. எதிர்கால சேவை– ஒவ்வொரு 12 மாத எதிர்கால சேவைக்கும் 1.5 மாத சம்பளம்

ஆ) 10 வருடங்களை விட குறைந்த சேவையுடைய ஊழியர்கள்

i. கடந்தகால 12 மாத சேவைக்கும் - 05 மாத சம்பளம்
ii. எதிர்கால சேவைக்காக எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

4. **கொடுப்பனவு வரையறை**

| | **ஆகக் குறைந்த வரையறை** | **ஆகக் கூடிய வரையறை** |
|---|---|---|
| பதவிநிலை தரம் | ரூபா. 450,000 | ரூபா. 2,500,000 |
| இரண்டாம் நிலை தரம் | ரூபா. 350,000 | ரூபா. 1,800,000 |
| ஆரம்ப நிலை தரம் | ரூபா. 250,000 | ரூபா. 1,200,000 |

5. **ஊழியர்களின் வகைப்படுத்தல்**

முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இல: 34 (i) இற்கமைவாக குறித்த வகுப்புக்களின் வகைப்படுத்தல் பின்வருமாறு அமையும்.

| **தொடர்புடைய தரம்** | **சம்பளக் குறியீடு** |
|---|---|
| பதவிநிலை தரம் | MM, AR மற்றும் HM |
| இரண்டாம்நிலைத் தரம் | MA மற்றும் JM |
| ஆரம்பநிலைத் தரம் | PL 1,2,3 |

6. **ஏனைய நிபந்தனைகள்**

(i) நிரந்தர பதவியணி வகையினைச் சாராத ஊழியர்கள் (ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் சேவையாற்றும் ஊழியர்கள் நீங்களாக)

(அ) கடந்த கால சேவையில் ஒவ்வொரு 12 மாதங்களுக்கும் 02 மாதச் சம்பளங்கள்
(ஆ) ஆகக் குறைந்த நட்டஈடு 12 மாதச் சம்பளங்களாக இருக்கும்
(இ) நட்டஈட்டு கணக்கீட்டு முறைமை (22 x நாள்ச் சம்பளம் x மாதங்களின் எண்ணிக்கை)

(ii) 50 வயது அல்லுத அதற்குக் குறைந்த வயதுடைய ஊழியர்கள் இத் திட்டத்திற்கு தகுதி பெறுவர். நட்டஈடு விருப்பு இளைப்பாறல் வயதான 55 வயதினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படும்.

(iii) இளைப்பாறலின் போது இறுதியாகப் பெற்ற அடிப்படை திரட்டிய மாதாந்தச் சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு நட்டஈடு கணிப்பீடு செய்யப்படும்.

(iv) நட்டஈட்டுக்கு மேலதிகமாக, அனைத்து நியதிச் சட்ட கொடுப்பனவுகளும் உரிய சட்டங்களின் நியதிகளுக்கமைவாக அவ்வந்த நிறுவனங்களின் மூலம் கொடுப்பனவு செய்யப்படும்.

(v) ஒழுக்காற்று விசாரணைகளின் கீழுள்ள அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் தமது பதவிநிலை கேள்விக் உள்ளாக்கப்பட்டுள்ள ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் தகைமை பெற மாட்டார்கள்.

(vi) இத்திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன், நிரந்தர, அமைய, ஒப்பந்த, குறைநிரப்பல் அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் திருத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக எவ்வித ஊழியர்களும் அதே நிறுவனங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் ஒப்பந்த உடன்படிக்கைகளின் கீழ் சேவையாற்றும் ஊழியர்களுக்கு அவர்களது ஒப்பந்தம் காலாவதியானதுடன் சேவை முடிவுறுத்தப்படுவதுடன் இத் திட்டத்தின் கீழ் எந்தவித நட்டஈடும் வழங்கப்படமாட்டாது.

(vii) குறித்த ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய அனைத்து நிலுவைகளும் நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(viii) இத்திட்டத்தின் மூலம் நன்மைகளை பெற்றுக் கொண்டு சேவையிலிருந்து ஓய்வு பெறுபவர்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரசாங்க உடமைக் கம்பனிகள் உள்ளடங்களாக அரசாங்கத் துறையில் எச் சந்தர்ப்பத்திலும் மீள இணைந்து கொள்வதற்கு தகைமை கொள்ள மாட்டார்கள்.

**7. ஏற்புடைமை**

இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்ட தன்னார்வ இளைப்பாறல் திட்டமானது, மூடுதல், இணைத்தல், மீள் கட்டமைத்தல் போன்ற அரசாங்கத்தின் கொள்கை அறிவுறுத்தலுக்கமைவாக இனம்காணப்பட்ட பொது தொழில் முயற்சிகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் என்பதுடன், அதன் செயற்பாடுகள் மீள ஏற்படுத்தப்படுவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி எவ்வித ஆட்சேர்ப்பும் இடம்பெற மாட்டாது என உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**08. முன்னைய சுற்றுநிருபத்தினை இரத்துச் செய்தலும் பயன்வலுத் திகதியும்**

அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிருப இல: 10 மற்றும் 10 (1) என்பன இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், இச் சுற்றுநிருபம் 2016 மார்ச் 1 ஆம் திகதியிலிருந்து பயன்வலுப் பெறுதல் வேண்டும்.

**09. விண்ணப்பப் படிவம்**

மாதிரி விண்ணப்பப் படிவம் பின்னிணைப்பு 1 என இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**10. இச் சுற்றறிக்கை தொடர்பான தெளிவுபடுத்தல்**

இச்சுற்றறிக்கை தொடர்பான ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். (தொலைபேசி 0112-484628 அல்லது 0112484617)

**ஒப்பம் : எஸ்.பி.வெல்லப்பிலி**
**திறைசேரி பதில் செயலாளர்**

பிரதிகள்:
1) சனாதிபதியின் செயலாளர்
2) கணக்காய்வாளர் நாயகம்
3) பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத்திணைக்களம்
4) பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

பின்னிணைப்பு 1

## தன்னார்வ இளைப்பாறல் கோரிக்கைக்கான விண்ணப்பப்படிவம்

முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர்
........................................................ (தொழில்முயற்சியின் பெயர்)
(ஊடாக)

ஐயா / அம்மணி

தன்னார்வ இளைப்பாறல்

................. ஆம் திகதிய ............... ஆம் இலக்க சுற்றுநிருபத்தினை நான் மிகக் கவனமாக வாசித்து அதன் உள்ளடக்கத்தினை தெளிவாக விளங்கிக் கொண்டதுடன் அதில் குறிப்பிடப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கு அமைவாக .............................................................................................. (தொழில் முயற்சியின் பெயர்) சேவையிலிருந்து தன்னார்வ இளைப்பாறலினை இத்தால் நான் வேண்டிக் கொள்கின்றேன்.

தன்னார்வ இளைப்பாறல் திட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நியதி நிபந்தனைகளை எவ்வித நிபந்தனைகளுமின்றி நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

மேற்குறித்த திட்டத்தின் கீழ் ......... ஆந் திகதியிலிருந்து ........................................ நிறுவனத்தின் சேவையிலிருந்து தன்னார்வ இளைப்பாறலினை வேண்டி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தேவையான விபரங்களையும் ஆவனங்களையும் சமர்ப்பிக்கின்றேன்.

நன்றி,
உண்மையுள்ள

ஊழியரின் கையொப்பம்
பதவி
பெயர்
இடம்
திகதி

**தன்னார்வ இளைப்பாறல் கோரிக்கைக்கான விண்ணப்பப்படிவம்**
**ஊழியரினால் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்**

பகுதி I

1. ஊழியரின் பெயர் :
2. தே.அ.அ. இல மற்றும் ஊ.சே.நி.இல :
3. பதவி :
4. பிறந்த திகதி :
5. நிறுவனத்தில் இணைந்த திகதி
தற்காலிய காலம் நீங்கலாக) :
6. நிறைவு செய்யப்பட்ட சேவை வருட எண்ணிக்கை :
7. விருப்பு இளைப்பாறல் திகதி :
8. பின்வருவனவற்றை நான் சான்றுப்படுத்துகின்றேன் :

(அ)மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் பூரணமானதும் உண்மையானதும் ஆகும்.

(ஆ)கடன்கள், நிலுவைகள் மற்றும் என்னால் செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளையும் அறவிடுவதற்கு ................................................ (நிறுவனத்தின் பெயர்) நான் அதிகாரம் அளிக்கின்றேன்.

(இ)மேலே குறிப்பிட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது எனக் காணப்படும் சந்தர்ப்பத்தில், இத்திட்டத்தின் கீழ் .............................................. (நிறுவனத்தின் பெயர்) இனால் எனக்கு செலுத்தப்பட்ட தொகையானது எவ்வித அறிவித்தலுமின்றி அறவிடப்பட முடியும் என்பதுடன் எனக்கெதிராக .................................................. (நிறுவனத்தின் பெயர்) இனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியுமென நான் உடன்படுகின்றேன்.

(ஈ) ............................................................ (நிறுவனத்தின் பெயர்) இலிருந்து 2016.03.08 ஆந் திகதிய 2/2016 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைய தன்னார்வ இளைப்பாறலுக்கு நான் இணங்கின்றேன்.

அலுவலரின் பெயர்
திகதி
இடம்